Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

வருகையின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 66 அவர் வானத்தை மேகங்களால் மூடி, பூமிக்கு மழையை ஆயத்தப்படுத்தி, மலைகளில் புல்லை முளைப்பிக்கிறார் சங்.147:8 பெப்ரவரி 2020 No.2

மிக மிக முக்கியமான கேள்வி - கர்த்தருடைய வருகைக்காக நீங்கள் ஆயத்தமா?

A vital question - Are you ready for the coming of the Lord!

Sarah Foulkes Moore

மிக விரைவாகக் கர்த்தர் வரப் போகிறார். அவர் மணவாளனாக வரப் போகிறார். அவர் மணவாட்டிக்காக வரப்போகிறார். அவர் தந்த மாளிகை களை விட்டு அவள் மேலுள்ள பிரியத்த னால் வரப்போகிறார்.

மணவாட்டியின் பேரழகு 45-ம் சங்கீதத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளது. 'உள்ளாகப் பூரண அழகுள்ளவள்'. கர்த்தருடைய மகிமை வேதத்தின் பல பகுதிகளில் விவரிக்கப்பட்டுள்ளது. மகிமை என்பதை அழகு என்றும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. எனவே நாம் ஆண்டவரை 'பரிசுத்த அலங்காரத் துடனே தொழுதுகொள்ள வேண்டும்' என்று 1 நாளா.16:29-ல் வாசிக்கிறோம். அதுபோல அவர் எதிர்பார்க்கும் மண வாட்டி பரிசுத்த அலங்காரத்துடனிருக்க வேண்டும். 'அவளது உடை பொற்சரிகை யாயிருக்கிறது' சங்.45:13. உள்ளும் புறம்பும் மகிமை நிறைந்த ஒரு மணவாட்டி அவருக்கு வேண்டும். எபேசி.5:27-ன் படி 'கறை திரை முதலான வைகள் ஒன்றுமில்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள' மண வாட்டியை அவர் எதிர்பார்க்கிறார் எபேசி.5:29. யோவான் தரிசனத்தில் காணும் மணவாட்டி தன்னை ஆயத்தப் படுத்திக்கொண்டவள் வெளி.19:7.

நமது பொறுப்பு ஆயத்தமாயிருப்பது!

முதற்பேறான சபை ஒரு கன்னி கை எனப்படுகிறது. ஏனெனில் அது தேவனுக்காக உலகிலிருந்து பிரித்தெடுக் கப்பட்டது. தனது ஊழியத்தில் பெற்ற கிறிஸ்தவர்களுக்கு "நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக் கொடுக்க நியமித்தபடியால் உங்களுக் காக தேவ வைராக்கியம் கொண்டிருக் கிறேன்" 2 கொரி.11:2 என்று பவுல் எழுது கிறார்.

கிறிஸ்தவனே! நீ உள்ளான மகிமையுடையவனா? உங்கள் ஆவிக் குரிய அங்கி கறை திரையற்றதாயிருக் கிறதா? மாம்சத்தால் கறைபட்ட ஆடையை தேவன் வெறுக்கிறார். நாமும் அவற்றை வெறுக்க அவர் விரும்புகிறார் யூதா.23.

> கிறிஸ்தவர்களுக்கும் கிறிஸ்துவுக்குமிடையில் இன்று ஒரு லௌகீக தடுப்புச்சுவர் இருப்பதால் விழித்திருப்பதற்கும், ஜெபத்தோடிருப்பதற்கும் தடையாயிருக்கிறது.

ஏனோக்கு மரணத்தைக் காணாத ஒரு பரிசுத்தவான். அவன் தேவனுக்குப் பிரியமானவன் எபி.11:5. உங்கள் வாழ்க்கை கற்புள்ளதும் தூய்மை யுள்ளதுமாயிருக்கிறதா? உங்கள் நடை அவருக்குப் பிரியமாயிருப்பதால் அவர் உனது அழகில் பிரியப்படுகிறாரா!

அவரது வசனம் தூக்குநூலாயிருக்கிறது

முக்கியமான காரியங்களில் நம்மை ஆயத்தப்படுத்தி அவர் வருகைக் காகக் காத்திருக்க வேண்டும். ஆனால் தாங்கள் ஆயத்தம் என்று சிலர் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். வேதத்தை வாசித்து ஆயத்தமாயிருப்பதற்கான நிபந்தனைகளை அறிந்துகொள்வது அவசியம். உங்கள் இருதயங்கள் பெருந் திண்டியினாலும், வெறியினாலும், லௌகீக கவலைகளினாலும் பாரமடை யாதபடிக்கும் நீங்கள் நினையாத நேரத்தில் அந்த நாள் உங்கள் மேல் வராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங் கள்..... ஆகையால் இனி சம்பவிக்கப் போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி மனுஷ குமாரனுக்கு முன்பாக நிற்க பாத்திரவான்களாக எண்ணப்படு வதற்கு எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள் என்றார் லூக்.21:34, 36. "விழித்துக்கொண்டு தன் வஸ்திரங்களைக் காத்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான்".

ஆண்டவர் தமது சீஷரிடம் அவர்கள் எச்சரிக்கையாகவும் விழிப்புட னுமிருக்கக் கட்டளையிட்டார். கடந்த கால ஆசீர்வாதங்களில் இளைப்பாறலாம் என்றோ முந்திய ஆவிக்குரிய அனுபவங் கள் அவர்களை வழிநடத்தும் என்றோ அவர் கூறவில்லை. விழித்திருக்கவும் கவனமாயிருக்கவும் ஜெபிக்கவும் கட்டளையிட்டார்.

"நான் சொல்லுகிறேன் - எல்லாருக்கும் சொல்லுகிறேன் விழித்திருங்கள்"

சபையின் தலைவராகிய கிறிஸ்து சொல்வது நம் எல்லோருக்குமானது எபே.5:23-24. அவர் அடிக்கடி கூறிய வார்த்தை 'விழித்திருங்கள்' என்பதாகும். இது ஜாக்கிரதையுடனும் எழுச்சியுட னுமிருப்பதைக் குறிக்கிறது. வரப் போகிற துன்பங்களுக்கு தப்பிக்கொள்ள ஒரே மார்க்கம் விழித்திருந்து ஜெபிப்பதாகும் மத்.24:42, 25:13, மாற்.13:35, லூக்.21:34-36, 1 தெச.5:6, 1 பேதுரு 4:7, வெளி.3:2, 16:15.

இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசிக்க பிரயாசப்படுங்கள். அனேகர் உட்பிரவேசிக்க வகை தேடி னாலும் அவர்களால் கூடாமற் போகும். மிகவும் வேதனைப்பட்டுப் பிரயாசப்பட வேண்டும். பவுல் தம்மைக் குறித்துச் சொல்லும்போது, பந்தயப் பொருளுக் காக இலக்கை நோக்கித் தொடருகிறேன் என்கிறார் பிலிப்பியர் 3:7-14 படிக்க.

ஒருவர் ஏற்றுக் கொள்ளப்படுவார் மற்றவர் கைவிடப்படுவார் மத்.24:32-42

லூக்.21:34-36 வசனங்களின் படி கவலையீனமாகவும் வெதுவெதுப்பான நிலையிலும், ஆயத்தமில்லாமலுமிருப் பவர்களின் நிலைமை என்ன பரிதாபம்! அதிகமாகப் பிந்திப்போகு முன் நாம் நித்திரையை விட்டு எழுந்து விழித் திருந்து ஜெபிக்க நம்மை உற்சாகப்படுத்து வது அவசியம். (மாற்.13:35, லூக்.21:34-36; 1 தெச.5:6, 1 பேதுரு 4:7, வெளி.3:2; 16:15)

லவோதிக்கேயாவின் உலக சிந்தை நிறைந்த கிறிஸ்தவர்களை ஆண்டவர் இவ்வாறு கடிந்து கொள் கிறார்: 'உன் கிரியைகளை அறிந்திருக் கிறேன்; நீ குளிருமல்ல, அனலுமல்ல, நீ குளிராயாவது அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும். இப்படி நீ வெது வெதுப் பாயிருக்கிறபடியால் உன்னை என் வாயி னின்று வாந்தி பண்ணிப் போடுவேன்' வெளி.3:15-16.

உங்கள் சேவையிலும், ஜெபத்தி லும், வேதவாசிப்பிலும் தனிப்பட்ட பகிரங்க சாட்சி வாழ்விலும் நீங்கள் அனலாயிருக்கிறீர்களா? குளிராயிருக்கி றீர்களா? அல்லது வெதுவெதுப்பாயிருக் கிறீர்களா? புத்தியுள்ள கன்னிகையாக வேதவசனத்தின்படி வாழ்வைக் காத்துக் கொள்கிறோமா? அல்லது புத்தியற்ற கன்னிகைகளைப் போல ஆயத்தமற்றவர் களாயிருக்கிறோமா?

சொகுசு, இன்பங்கள் போன்ற வற்றை விரும்பும் கிறிஸ்தவர்களாக இருப்பதற்கு பதிலாக பவுலைப் போல இலக்கை நோக்கித் தொடர வேண்டா மா! முதல் உயிர்த்தெழுதலில் பங்கு பெறுவதற்காக அவர் எல்லா பாரங்களை யும் விட்டு பல இழப்புகளை ஏற்றுக் கொண்டார்.

"சீயோனிலே நிர்விசாரமாயிருக்கிறவர்களுக்கு ஐயோ" ஆமோஸ் 6:1-7

"உங்கள் அரைகள் கட்டப்பட்ட தாகவும், உங்கள் விளக்குகள் எரிகிற தாகவும், தங்கள் எஜமான் கலியாணத்தி லிருந்து வந்து தட்டும்போது உடனே அவருக்குத் திறக்கும்படி எப்பொழுது வருவார் என்று காத்திருக்கிற மனுஷனுக்கு ஒப்பாகவும் இருங்கள்" லூக். 12:35-36.

(3-ம் பக்கம் பார்க்க)

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : T. Peter, D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

இம்மாத பொன்னான சிந்தனை

இயேசுவை பிடித்திருக்கிறவன் உலகும் வானும் வீழ்ந்தாலும் விழான்.

வாக்குத்தத்தம்

உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம்; உனக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும் நீ குற்றப்படுத்துவாய்; இது கர்த்தருடைய ஊழியக்காரரின் சுதந்தரமும், என்னாலுண்டான அவர்களுடைய நீதியுமாயிருக்கிறதென்று கர்த்தர் சொல்லுகிறார். ஏசாயா 54:17

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

2020 பெப்ரவரி மாத தூதனுக்காக என் தேவனை நன்றியோடும், தாழ்மையுடனும் துதிக்கிறேன். மோசேயை போல, "நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி, எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும்" என்று ஜெபிப்போமாக.

வழக்கத்திற்கு மாறாக அதிகாலை சுமார் 4.00 மணியளவில் இந்த ஆசிரியர் கடிதத்தை வாசகராகிய உங்களுக்கு எழுதுகிறேன்.

1. கர்த்தர் விசனப்படுகிறாரா? மனுஷருடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும் கர்த்தர் கண்டு;

தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு **விசனமாயிருந்தது** ஆதி.6:5,6.

தேவனாகிய கர்த்தர் உங்களைப் பார்த்து, உங்கள் குடும்பம், பிள்ளைகளின் வாழ்க்கையைப் பார்த்து **விசனப்படுகிறாரா?** நீங்கள் குடும்பமாய் கர்த்தரை ஆராதிக்கிறீர்களா? **"..... இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா"** என்று கர்த்தர் கேட்கிறார், உங்கள் பதில் என்ன? "..... நான் உம்மை நேசிக்கிறேன்" என்பீர்களா? யோவான் 21:15-17.

2. ஊழியரை விசனப்படுத்துகிறீர்களா? மேரிபாவின் தண்ணீர்களிடத்திலும் அவருக்கு கடுங்கோபம் மூட்டினார்கள்; அவர்கள் நிமித்தம் மோசேக்கும் பொல்லாப்பு வந்தது.

அவர்கள் அவன் ஆவியை **விசனப்படுத்தினதினாலே**, தன் உதடுகளினால் பதறிப் பேசினான் சங்கீதம் 106:32, 33.

தேவன் நம்மோடு தெளிவாக பேசுகிறவர். "அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி : . . .

அங்கே ஓரேபிலே நான் உனக்கு முன்பாகக் கன்மலையின் மேல் நிற்பேன்; நீ அந்தக் **கன்மலையை அடி;** அப்பொழுது ஜனங்கள் குடிக்க அதிலிருந்து தண்ணீர் புறப்படும் என்றார்; அப்படியே மோசே இஸ்ரவேல் மூப்பரின் கண்களுக்கு முன்பாகச் செய்தான்" யாத்.17:5,6.

வருகையின் தூதன் ஊழியங்களின் மாத தேவை ரூபாய் 1 லட்சம்.
ஆண்டவர் உங்களை ஏவுகிறபடி உதாரத்துவமாய் உதவுங்கள்.

கடிதங்கள், காணிக்கை, ஜெப விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி :
வருகையின் தூதன், நியுபோர்ட் தெரு, நாகர்கோவில் - 629 001
VARUKAYIN THOOTHAN, Newport Street, Nagercoil-629 001.
Mobile: 95432 21008, 9489740295, **e-mail:**Varukayinthoothan@hotmail.com

பத்திரிகை பணி
A/c. Name : **VARUKAYIN THOOTHAN,** A/c. No.:431521036
Indian Bank,W.C.C. Road, Nagercoil-1 IFSC Code : IDIB000N006

உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No.: 370601000002557
I.O.B., Court Road, Nagercoil-1 IFSC Code : IOBA0000063

முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No.: 61822200136904
Syndicate Bank, W.C.C. Road, Nagercoil-1 IFSC Code : SYNB0006182

2020	**2020**
Year of walking with God	**தேவனோடு சஞ்சரிக்கும் ஆண்டு**

இன்னொரு சந்தர்ப்பத்தில் "கர்த்தர் மோசேயை நோக்கி :

நீ கோலை எடுத்துக்கொண்டு, நீயும் உன் சகோதரனாகிய ஆரோனும் சபையாரைக் கூடிவரச் செய்து, அவர்கள் கண்களுக்கு முன்னே **கன்மலையைப் பார்த்துப் பேசுங்கள்;** அப்பொழுது அது தன்னிடத்திலுள்ள தண்ணீரைக் கொடுக்கும், ... என்றார்.

அப்பொழுது மோசே தனக்குக் கர்த்தர் கட்டளையிட்டபடியே கர்த்தருடைய சந்நிதியிலிருந்த கோலை எடுத்தான்.

..... அப்பொழுது மோசே அவர்களை நோக்கி: கலகக்காரரே கேளுங்கள், உங்களுக்கு இந்த கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்படப் பண்ணுவோமோ என்று சொல்லி,

தன் கையை ஓங்கி, **கன்மலையைத்** தன் கோலினால் இரண்டுதரம் **அடித்தான்;** உடனே தண்ணீர் ஏராளமாய்ப் புறப்பட்டது, சபையார் குடித்தார்கள்.

பின்பு கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி: இஸ்ரவேல் புத்திரரின் கண்களுக்கு முன்பாக என்னைப் பரிசுத்தம் பண்ணும்படி, நீங்கள் என்னை விசுவாசியாமற் போனபடியினால், இந்தச் சபையாருக்கு நான் கொடுத்த தேசத்துக்குள் நீங்கள் அவர்களைக் கொண்டு போவதில்லை என்றார்" எண்ணாகமம் 20:7-12.

3. உறவினரை விசனப்படுத்துகிறீர்களா? கர்த்தர் அவள் கர்ப்பத்தை அடைத்தபடியினால், அவளுடைய சக்களத்தி அவளுக்கப்படும்படியாக அவளை மிகவும் **விசனப்படுத்துவாள்.**

அவள் கர்த்தருடைய ஆலயத்திற்குப் போகும் சமயத்தில், அவள் வருஷந்தோறும் அந்தப் பிரகாரமாய்ச் செய்வாள்; இவள் அவளை மனமடிவாக்குவாள்; அப்பொழுது அவள் (அன்னாள்) சாப்பிடாமல் அழுதுகொண்டிருப்பாள் 1 சாமுவேல் 1:6,7.

4. பிறரைப் பார்த்து விசனப்படுகிறீர்களா? துன்மார்க்கரின் வாழ்வை நான் காண்கையில், வீம்புக்காரராகிய அவர்கள் மேல் பொறாமை கொண்டேன்.

அவர்கள் முடிவைக் கவனித்து உணருமளவும், அது என் பார்வைக்கு **விசனமாயிருந்தது** சங்கீதம் 73:3, 17.

5. தேவன் தீங்கைக் குறித்து மனஸ்தாபப்பட்டு, அதைச் செய்யாதிருந்தால் விசனமாயிருக்கிறதா? அவர்கள் தங்கள் பொல்லாத வழியைவிட்டுத் திரும்பினார்களென்று தேவன் அவர்களுடைய கிரியைகளைப் பார்த்து, தாம் அவர்களுக்குச் செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக் குறித்து மனஸ்தாபப்பட்டு, அதைச் செய்யாதிருந்தார்.

யோனாவுக்கு இது மிகவும் **விசனமாயிருந்தது;** அவன் கடுங்கோபங்கொண்டு,

கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினான் யோனா 3:10; 4:1-3.

6. இயேசப்பாவுக்குக் கொடுப்பது விசனமாயிருக்றதா? இயேசு பெத்தானியாவில் குஷ்டரோகியாயிருந்த சீமோன் வீட்டில் இருக்கையில்,

ஒரு ஸ்திரீ விலையேறப்பெற்ற பரிமள தைலமுள்ள வெள்ளைக்கல் பரணியைக் கொண்டுவந்து, அவர் போஜன

(8-ம் பக்கம் பார்க்க)

உயிர்மீட்சிக்காக 7 மணி நேர உபவாச ஜெபம்
7 HOURS FASTING PRAYER

காலம் : ***08.02.2020***
சமயம் : காலை 10.00 மணி முதல் மாலை 5.00 வரை
இடம் : **Christian Assembly Mission**
71/215, Mettu Street, Ayanavaram, Chennai
தொடர்பு : Pastor **C. Victor,** Phone - 044 2780608
Pastor **David Gorden Noble,** Mobile - 80560 02334

குறிப்பு: சென்னை வாசகர் கலந்து கொள்ளும்படி அதிக அன்பாய் அழைக்கிறோம்
தொடர்பு : **9543221008, 9489740295**

(1-ம் பக்க தொடர்ச்சி)

பெரும்பாலான கிறிஸ்தவர்களுக்கும் கிறிஸ்துவுக்குமிடையில் இன்று ஒரு லௌகீக தடுப்புச்சுவர் இருப்பதால் விழித்திருப்பதற்கும், ஜெபத்தோடிருப்பதற்கும் தடையாயிருக்கிறது. சபைகள் மந்தமானதும், சொகுசை நாடுவதுமான மக்களால் நிறைந்திருக்கின்றன. அவர்கள் சுயநோக்குடையவர்களாகவும், விழிப்பற்று நகருகிறவர்களாகவும் உலகத்தோடு அடித்துச் செல்லப்படுகிறவர்களாகவும் ஆண்டவரால் கொடுக்கப்பட்ட கட்டளைகளைக் கொண்டு நடத்தக் கூடாமல் தேவகுமாரனுடைய சன்னிதியில் நிற்கக் கூடாதவர்களாய் இருக்கிறார்கள்.

அவருடைய வருகைக்காகக் காத்திருப்போர் "..... ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரை தரிசிப்பதினால் அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்" *1 யோவான் 3:2.*

"சீக்கிரமாக வரவிருக்கும் கர்த்தருடைய வருகை, பரிசுத்தமான, சுயநல மற்ற, பக்தியுள்ள, லோக சினேகமற்ற, சுறுசுறுப்பான கிறிஸ்தவனின் வாழ்வில் ஒரு மிகப்பெரிய வேத அடிப்படையிலான விவாதம்" என்று R.A. Torrey கூறுகிறார். "நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன்; ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து, மனந்திரும்பு. இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவை திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம் பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான்" வெளி.*3:19-20.*

அன்பானவர்களே இந்தக் கடைசி மணி வேளையில் உங்களுக்கும் ஆண்டவருக்கும் இடையில் எதுவும் வராமல் கவனித்துக் கொள்ளுங்கள். தேவ கிருபையால் மட்டுமே நாம் நிலை நிற்க முடியும். "இவை எல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்பு கூருகிற வராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோம்." ரோமர் *8:35-39.*

அவர் மணவாளனாக வரப் போகிறார். அவர் தமது பிதாவிடமும், தூதர்களிடமும் திரும்பிச் சென்று சிங்காசனத்தில் அமர, உங்களை ஆவிக்குரிய அழகுள்ளவர்களாக அழைத்துச்செல்லத் தகுதியுடனிருக்கிறீர்களா? "இதோ திருடனைப் போல் வருகிறேன். தன் மானம் காணப்படத்தக்கதாக நிர்வாணமாய் நடவாதபடிக்கு விழித்துக்கொண்டு தன் வஸ்திரங்களைக் காத்துக் கொள்ளுகிறவன் பாக்கியவான்" வெளி.*16:15.*

சபைகள் மந்தமானதும், சொகுசை நாடுவதுமான மக்களால் நிறைந்திருக்கின்றன. அவர்கள் சுயநோக்குடையவர்களாகவும், விழிப்பற்று நகருகிறவர்களாகவும் உலகத்தோடு அடித்துச் செல்லப்படுகிறவர்களாகவும் ஆண்டவரால் கொடுக்கப்பட்ட கட்டளைகளைக் கொண்டு நடத்தக் கூடாமல் தேவ குமாரனுடைய சன்னிதியில் நிற்கக் கூடாதவர்களாய் இருக்கிறார்கள்.

தூய ஆவியானவரும் கிறிஸ்துவின் வருகையும்

The Holyspirit and Christ's return

A.B. Simpson

"..... ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்....." வெளி.*22:17.*

இந்த மிகப்பெரிய ஆகமத்தில் தூய ஆவியானவரின் கடைசி வார்த்தை மிகவும் அழகியதும் குறிப்பிடத்தக்கது மாகும். ஆண்டவருடைய வருகை அவர் வருவதற்காகக் கதறி அழைக்கும் ஒரு அழைப்பாக வெளிப்படுத்தப்படுகிறது. கிறிஸ்து பரமேறிய பின்பு தூய ஆவியானவரின் பாரமான பணி அவரது வருகைக்காக ஆயத்தம் பண்ணுவதாகும். பரத்துக்குச் சென்ற நமது ஆண்டவரின் இரு செய்திகள் அப்போஸ்தலர் நடபடிகளின் முதல் அதிகாரத்தின் 10 வசனங்களில் அடங்கியுள்ளன. அவை தூய ஆவியானவர் வாக்களிக்கப்பட்டதும், அவரது இரண்டாம் வருகையுமாகும். இவை இரண்டிற்குமிடையில் கிறிஸ்தவ யுகம் காணப்படுகிறது. இரண்டாம் வருகைக்கு ஆயத்தமாக தூய ஆவியானவர் பெறப்பட வேண்டும்.

ஆவியானவரும் தீர்க்கதரிசன வசனமும்:

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்து தூய ஆவியானவர் முன்பே நமக்குக் கூறியுள்ளார். இந்த ஆசீர்வாதமான நம்பிக்கையை ஆதித் திருச்சபைக்கு அதன் துக்கங்களில் ஆறுதலாகவும் அதன் உழைப்பில் தூண்டுதலாகவும் கற்பித்திருக்கிறார். எருசலேமில் முதல் அப்போஸ்தல ஆலோசனை சங்கத்தில் கிறிஸ்தவ யுகத்தின் தெளிவான எல்லைக்கோட்டின் திட்டத்தை அளித்திருக்கிறார். பவுலுக்கு அப்போஸ்தலத்தைக் குறித்தும் கொரிந்தியர் மற்றும் தெசலோனிக்கேயருக்கு எழுதிய வருகையின் செய்திகளிலும் தெளிவாகக் கூறியுள்ளார். இறுதி அப்போஸ்தலர்களுக்கு மிகத் தெளிவாக ஆண்டவரின் வருகையைக் குறித்த முந்திய காட்சிகளை வெளிப்படுத்தியுள்ளார். எல்லாவற்றையும் ஒட்டு மொத்தமாக்கி வானத்துக்கு நேராக இறுதி ஜெபமாக "ஆண்டவராகிய இயேசுவே, சீக்கிரம் வாரும்" என்கிறார். ஆண்டவரின் வருகையின் அனைத்து நிகழ்வுகளும், விபரங்களும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. தூய ஆவியானவர் சாட்சியை தெளிவாகவும், எளிதாகவும் ஆக்கியுள்ளார்.

தீர்க்கதரிசன வாக்கியங்களை மொழிபெயர்த்து வெளிச்சப்படுத்தியது தூய ஆவியானவர். தீர்க்கதரிசன வாக்கியங்களை புரியவைக்க நமக்கு ஒருவர் வேண்டும். தானியேல் வருகையின் தரிசனங்களைக் கூறினான். அவன் தெளிவற்ற முறையில் புரிந்துகொண்டு முடிவின் காலம் வரைக்கும் அவற்றை முத்திரையிட்டு வைக்கும்படி உத்தரவு பெற்றான். முடிவு சமீபிக்கும்போது ஞானமுள்ளவர்கள் அதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்றது இப்போது நடக்கிறது.

இக்கடைசி நாட்களின் மிகக் குறிப்பான அடையாளமும் இக்கால இரகசியமுமாயிருப்பது முடிவடையப் போகிறது. அது நமது காலத்தின் தீர்க்க தரிசன விளக்கத்தின் மீது தூய ஆவியானவர் பொழிந்திருக்கும் ஆச்சரியமான ஒளியாகும். தவறுகள் உண்டு, தெளிவின்மைகளும் காணப்படலாம், தெளிவாக்கப்பட வேண்டியவைகள் இருக்கலாம், ஆனால் மிகப்பெரிய எதிர்கால அடையாளம் தெளிவாகவும் எளிதாகவுமிருக்கிறது. கிறிஸ்துவின் சபை உண்மையுள்ளதாயிருக்கவும், வருகைக்கு ஆயத்தப்படவும் போதுமான அளவு அறிந்திருக்கிறது.

ஆவலையும் எதிர்பார்ப்பையும் விழிப்படையச் செய்தல்

ஆண்டவராகிய இயேசு முதல் முறை இவ்வுலகத்திற்கு வரவிருந்தபோது அவரது உத்தமமான ஜனங்கள் மீட்புக்காகவும் இஸ்ரவேலின் ஆறுதலுக்காகவும் காத்திருந்தனர். வேளை வந்த போது அவரை வரவேற்க ஆயத்தமாயிருந்தனர். சிமியோனையும் அன்னாளையும் குழந்தை இயேசு ஆலயத்திற்குக் கொண்டு வந்தபோது விசேஷித்த அழைப்புக் கொடுக்க வேண்டியிருக்கவில்லை. தூய ஆவியானவரின் எளிய ஏவுதலால் அவர்கள் அங்கு வந்திருந்தனர். சிமியோன் பிள்ளையைத் தன் கரங்களில் ஏந்தி ஆசீர்வதித்தான். அன்னாள் அந்த சந்தோஷ காட்சியைக் கண்டு எருசலேமில் இரட்சிப்புக்காகக் காத்திருந்தவர்களுக்கு அதைச் சொல்லப் புறப்பட்டாள் லூக்.*2:35.*

கடைசியிலும் இவ்வாறாகவே நடக்கவிருக்கிறது. கிறிஸ்துவின் சிமியோன்களும், அன்னாள்களும் காத்துக் கொண்டிருப்பார்கள். விடிவதற்கான முதல் ஒளிக்கதிர்கள் அவர்கள் கண்டாயிற்று. மணவாளன் நெருங்கி வருவதற்கான முதல் உணர்வு ஏற்பட்டு விட்டது. அந்த வேளை நெருங்கும் போது அது சிறுமந்தைக்கு அதிக சீராகவும் உலகமனைத்திற்கும் வெளிப்படும். அந்த நாள் வரும்போது மணவாட்டி 'திருடனைப் போல பிடித்துக் கொள்ளத்தக்கதாக' அந்தகாரத்தில் இருக்கக்கூடாது *1 தெச.5:4.* ஆனால் அவரை சந்திக்க ஆயத்தமாயிருக்க வேண்டும்.

இந்த ஆசீர்வாதமான நம்பிக்கை நமது இருதயத்தில் இடம்பிடித்திருப்பது இக்காலத்திற்கு ஒரு அடையாளம். உலக ஞானம் இகழ்ந்தாலும், மனித பேராசை அடுத்த தலைமுறையினரைக் குறித்து திட்டமிட்டுக் கொண்டிருந்தாலும், சுயநலம் மிக்க உலகம் தனது சிறிய அச்சிலே சுழன்றாலும் நமது கண்கள் கிழக்கை நோக்கியிருக்கின்றன. நமது இருதயங்கள் உள் உணர்வின் மூலம் கர்த்தரின் வருகை வெகு சமீபம் என்று அறிவிக்கின்றன.

தூய ஆவியானவரின் மெல்லிய சத்தத்தைக் கேட்போமாக. அதன் முழு கருத்தையும் பற்றிக்கொள்வோம். அந்த

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்க தொடர்ச்சி)

நாள் நெருங்கி வரும்போது நமது தலைகளை உயர்த்துவோம். ஆண்டவரது வருகையின் அழைப்பு சீக்கிரம் வர ஆயத்தப்படுவோம். அவரை ஆகாயத்தில் சந்திப்போம்.

தேவ பிள்ளைகளைத் தரிப்பித்தல்

தூய ஆவியானவர் ஆவிக்குரிய அங்கியை அணிவித்து தமது ஜனத்தை அவரது வருகைக்காக ஆயத்தப்படுத்துகிறார் வெளி.19:7-8 படிக்க.

கிறிஸ்தவ உலகத்தின் எல்லா பகுதிகளிலும் குறிப்பிட்ட அசைவு ஏற்பட்டு கிறிஸ்துவுக்காக மக்கள் தங்களை முழுவதுமாக அர்ப்பணிக்கவும் தூய ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெற்று மறுரூபமடைந்து கிறிஸ்துவில் உறுதிப்படவும் ஏதுவாகும்.

இது மணவாளன் வாசலண்டை வந்துவிட்ட நேரம். மணவாட்டி ஆடையணிந்து தயாராகும்போது மணவாளன் பின் தங்கமாட்டார். இது ஒரு விசேஷித்த மார்க்க அசைவின் காலம். இதை சுத்திகரிப்பு, இரண்டாம் ஆசீர்வாதம், தூய ஆசியானவரின் ஞானஸ்நானம், உயரிய கிறிஸ்தவ வாழ்வு, முழுமையான அர்ப்பணம் என்ற எந்தப் பெயராலும் அழைக்கலாம். இது தேவன் தமது சொந்த ஜனத்திற்குக் கொடுக்கும் அழைப்பு. இது எஜமானின் வருகைக்கு முன்னோடி.

நாம் கலியாண வஸ்திரத்தைப் பெற்றிருக்கிறோமா? நமது விளக்குகளோடு பாத்திரங்களில் எண்ணையும் வைத்திருக்கிறோமா? 'சுத்தமானது' மட்டுமல்ல 'பிரகாசமானதும்' கறையற்றதும் மட்டுமல்ல அழகும் மகிமையும் நிறைந்த ஆசாரிய உடையை அணிந்திருக்கிறோமா? உள்ளாடையும் வெளி ஆடையும் அணிய வேண்டும். உள் ஆடை கறையற்றதாயிருக்க வேண்டும். வெளிப்புற அங்கி மகிமையுள்ளதாயிருப்பது அவசியம். வாழ்வின் கட்டுப்பாட்டிற்கு தூய ஆவியானவர் இவ்வாறு நம்மை நடத்துகிறார்.

வெண்மை என்பது இங்கு பிரகாசத்தைக் குறிக்கிறது. மறுரூப வேளையில் ஆண்டவரின் ஆடை இவ்வாறே காணப்பட்டது. நாம் வெண்மையும் அழகுமான ஆடையை அணிவோம். தூய ஆவியானவரின் கிருபையால் ஆயத்தமாவோம்.

தேசங்களில் தெய்வாதீன பணிகள்

புறஜாதிகளின் அரசர்களைத் தொட்ட தூய ஆவியானவர் அவர்கள் தமது திட்டங்களை நிறைவேற்றும் கருவிகளாக பயன்படுத்தினார். இன்றும் அவர் கடைசிநேர பணிகளைத் தொடர்ந்து செய்கிறார். அசாதாரண நிகழ்வுகள் மிக வேகமாக நம்மைச் சுற்றிலும் நடைபெறுகின்றன. அவை ஆச்சரியமான பொருள் நிறைந்தவை.

உலகத்தை சுவிசேஷத்தால் நிரப்புதல்

தூய ஆவியானவர் கிறிஸ்துவின் சீஷர்களை கிறிஸ்துவுக்கு சாட்சியாகவும், சுவிசேஷத்தை உலகுக்கு எடுத்துச் செல்லவும் அவர்களில் கொண்டிருக்கும் நம்பிக்கையை நிறைவேற்ற அனுப்பிக் கொண்டிருக்கிறார். இது கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தம் செய்வதின் மிகப் பெரிய பணியாகும். ஆவியானவரின் வாக்குத்தத்தத்தோடு தொடர்புள்ள மிகப்பெரிய கட்டளை. ".... பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும் போது, நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும் எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்" அப்.1:8.

இன்று தூய ஆவியானவர் சுவிசேஷத்தை அனேக இடங்களுக்கு அனுப்பி பலத்த கிரியைகளை நடப்பிக்கிறதை நாம் காண்கிறோம். விசுவாசியின் இருதயத்தில் தூய ஆவியானவர் ஒரு மகிழ்ச்சியான உணர்ச்சியாயிருக்கிறார். அவர் செயல்படும் மிஷனெறி. உற்சாகத்தையும் உலகமெங்கும் சுவிசேஷத்தை அறிவிக்கும் தாக்கத்தையும் ஏற்படுத்துகிறார். எனவே அவர்கள் இருதயம், ஆண்டவராகிய இயேசுவே சீக்கிரம் வாரும் என்று கதறும். "..... தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத் தண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்ளக்கடவன்" வெளி.22:17.

உண்மையாகவே நாம் தூய ஆவியால் நிரப்பப்பட்டு, கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தமாயிருந்தால் சுறுசுறுப்பாக சாட்சிகளாயிருக்கவும் அனேகரை ஆயத்தப்படுத்துகிறவர்களாயும் இருப்போம். தேவன் நம்மை வைத்திருக்குமிடத்தில் உத்தமமாயிருப்போம். நாமிருக்குமிடத்தில் ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணுவதோடு பல இடங்களுக்குச் செல்ல முடியாவிட்டால், பிறர் உலகமெங்கும் சுவிசேஷம் அறிவிக்க உதவிசெய்வோம்.

கிறிஸ்தவ வாழ்வில் எவ்வளவோ சொகுசுகளை அனுபவிக்கிற நாம் ஆண்டவராகிய இயேசுவின் இடைவிடா தியாகத்தை மறந்து அவரது பணியைத் தொடராமலிருக்கிறோம்.

முடிவு வருமுன்னால் நம்மால் இயன்றவரை சுவிசேஷம் அறிவிக்க உத்தமமாக செயல்படுகிறோமா?

இதை வாசிக்கும்போதே தேவ அழைப்பைப் பெற்று ஊழியம் செய்ய ஏவப்படுகிறீர்களா? "ஆமென் கர்த்தராகிய இயேசுவே வாரும்" வெளி.22:20. ஆம் சீக்கிரமாக வாரும்.

மணவாட்டி ஆயத்தமா?

Is the bride ready

Dave Butts

ஒரு திருமணம் நடைபெற பல ஆயத்தங்கள் செய்யப்பட வேண்டும். விருந்தினர்களை உட்கார வைக்க வேண்டும். மெழுகுவர்த்திகள் ஏற்றப்பட வேண்டும். இசைக் கருவிகள் மீட்டப்பட வேண்டும். ஆனால் இவை எல்லாவற்றிலும் மிக முக்கியமானது, மணப்பெண் ஆயத்தமாக வேண்டும். அவள் ஆயத்தமாகி அவளுடைய இடத்தில் அமராவிட்டால் திருமணம் ஆரம்பிக்கப்பட முடியாது.

ஆண்டவர் மணவாட்டியின் ஆயத்தத்தைக் குறித்து நான் சிந்திக்கச் செய்தார். வேதவசனம் சபையை மணவாட்டியாகத் தெளிவுபடுத்துகிறது. வெளி.19:7-8 வசனங்கள் ஒரு தம்பதியின் திருமண நாளைக் குறித்து அழகிய காட்சியினை அளிக்கின்றன. "நாம் சந்தோஷப்பட்டு களிகூர்ந்து அவருக்குத் துதி செலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள் என்று சொல்லக் கேட்டேன். சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்துக் கொள்ளும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது. அந்த மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதிகளே".

புதிய ஏற்பாட்டில் ஆண்டவர் தமது ஜனத்தைத் திருமணம் செய்வது அழுத்தமாகக் கூறப்படவில்லை. ஆனால் பழைய ஏற்பாட்டின் ஆக்கியோன்கள் இஸ்ரவேலை மணவாட்டியாக ஆண்டவரோடு திருமணம் செய்ய நியமிக்கப்படுவதாக எழுதியிருக்கிறார்கள். "..... மணவாளன் மணவாட்டியின் மேல் மகிழ்ச்சியாயிருப்பது போல உன் தேவன் உன் மேல் மகிழ்ச்சியாயிருப்பார்" ஏசா.62:5. ".... நீ என்னைப் பின்பற்றி வந்த உன் இளவயதின் பக்தியையும், நீ வாழ்க்கைப்பட்டபோது உனக்கிருந்த நேசத்தையும் நினைத்திருக்கிறேன்..... ஒரு பெண் தன் ஆபரணத்தையும், ஒரு மணவாட்டி, தன் ஆடைகளையும் மறப்பாளோ? என் ஜனங்களோ எண்ணி முடியாத நாட்களாய் என்னை மறந்து விட்டார்கள்" எரே.2:2, 32.

தேவன் தமது ஜனத்தோடுள்ள நெருங்கிய உறவை இந்த திருஷ்டாந்தத்தின் மூலம் விளக்குகிறார். ஒரு மனிதனும் மனுஷியும் ஒருவரையொருவர் நேசித்து, பின்பு நிச்சய ஒப்பந்தம் செய்து இறுதியாக திருமணம் செய்து இணைக்கப்படுகிறார்கள். வேதவசனம் முழுவதிலும் தேவன் இந்த விருப்பத்தைத் தமது ஜனங்களில் எதிர்பார்ப்பதைக் காண்கிறோம்.

ஆயத்தப்பட இது சமயமாயிருக்கிறது

மணவாட்டி திருமண நாளுக்காகத் தன்னை ஆயத்தம் பண்ணுவது அவசியம். ஆண்டவரின் வருகையை நெருங்கி வரும் நமக்கு இது மிகவும் அவசரமான ஒன்று. வெளிப்படுத்தின விசேஷம் 19:7-ல் ஆயத்தத்தைக் குறித்த இரு காரியங்களைக் காணலாம். முதலாவது அவள் திருமணத்திற்காக ஆயத்தமாக வேண்டும். இரண்டாவது அவளே திருமணத்திற்கான ஆயத்தங்களைச் செய்ய வேண்டும். "ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள்".

சபையாகிய கிறிஸ்துவின் மணவாட்டி இன்று கலியாணத்திற்கு ஆயத்தமா?

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்க தொடர்ச்சி)

இல்லாவிட்டால் உடனே ஆயத்தப் பணிகளை ஆரம்பிக்க வேண்டும்.

மணவாட்டி மணவாளனை சந்திக்க ஆயத்தமாவது என்பதின் கருத்து என்ன? இது ஒரு பெரிய விஷயமானாலும் சுருக்கமாக உங்கள் முன் வைக்கிறேன்.

நாம் கர்த்தருடையவர்கள்

ஆயத்தத்திற்கான முதல் சத்தியம் நாம் யாருடையவர்கள் அல்லது யாருக்கு சொந்தமானவர்கள் என்பதாகும். மணவாட்டி மணவாளனுக்கு சொந்தமானவள். இந்த நாட்களின் கலாச்சாரம் திருமண உறவில் ஒருவர் மற்றவருக்குச் சொந்தம் என்பதை ஒப்புக்கொள்வதில்லை.

சபை கிறிஸ்துவின் மணவாட்டி. எனவே சபை கிறிஸ்துவுக்குச் சொந்தம். இது சட்டப்படி கல்வாரியால் ஏற்பட்ட உறவு. மட்டுமல்ல இருதய சம்பந்தமான உறவு. இது ஒரு அன்பின் உறவு. எனவே வேறு எந்த அன்போ, ஆசையோ இதற்குள் நுழைந்து இந்த உறவை நாசம் பண்ண முடியாது. சபைதான் கிறிஸ்துவுக்கு சொந்தம் என்பதை உணர்ந்து இந்த உறவை வலுப்படுத்த வேண்டும்.

குற்றம் குறையில்லாத ஒரு மணவாட்டி

இன்னொரு சத்தியம் பேதுரு எழுதிய இரண்டாம் நிருபத்தில் காணப்படுகிறது. அங்கு இயேசுவின் இரண்டாம் வருகை போதிக்கப்படுகிறது. "ஆகையால் பிரியமானவர்களே இவைகள் வரக் காத்திருக்கிற நீங்கள் கறையற்றவர்களும் பிழையில்லாதவர் ஞமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள்" 2 பேதுரு 3:14. இந்தப் பகுதி சபையில் ஒரு பெரிய எழுப்புதல் வரப் போகிறதைக் காண்பிக்கிறது. எழுப்புதல டைந்த சபை மனந்திரும்பி பாவத்திலிருந்து விலகி கறையற்றதும், பிழையில்லாததுமான வாழ்வை வாழ்சிக்கும். எழுப்புதலடைந்த சபை தன்னை கிறிஸ்துவின் அதிகாரத்துக்கும் தலைமைத்துவத்திற்கும் ஒப்புவித்து மணவாளனோடு சமாதானமாயிருக்கும்.

அப்போஸ்தலனாகிய யோவான் ஆயத்தமாக்கப்பட்ட மணவாட்டியின் காட்சியினைக் கண்டார். "நான் புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தை தேவனிடத்தினின்று இறங்கி வரக் கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது" வெளி.21:2. உங்கள் வாழ்வின் வாஞ்சை என்ன? ஆண்டவராகிய இயேசு மணவாளனாக இறங்கி வரும்போது சபை ஆயத்தமாயிருப்பதைக் காண முடியுமா?

பலிபீடத்தில் மணவாட்டி

இந்த தலைப்பை நான் கடந்த நாட்களில் படித்து தியானித்த போது ஆண்டவர் சில காரியங்களை எனக்கு போதித்தார். எனது ஜெபநேரத்தின் மத்தியில் நான் என் மனதில் ஒரு மணவாட்டி பலிபீடத்தின் அருகில் மணவாளனுக்காக காத்திருப்பதை மனக்கண் முன்பாக நிறுத்தினேன். ஆனால் நான் தொடர்ந்து ஜெபத்திலிருந்தபோது ஒரு பரிசுத்தமான வேளையில் ஆண்டவர் என் உள்ளத்தில் ஒரு எண்ணத்தைத் தந்து "மணவாட்டி பலிபீடத்திற்கு இன்னும் வரவில்லை" என்று எளிமையாகக் கூறினார்.

இது எளிய ஒரு சொற்றொடராயிருப்பினும் அது ஒரு கடிந்து கொள்ளுதலும், உற்சாகமூட்டுதலுமாயிருக்கிறது. மணவாட்டி பற்பல காரியங்களில் ஈடுபட்டிருப்பதால் பீடத்திற்கு வரமுடிய வில்லை.

கடிந்து கொள்ளுதல் தெளிவாயிருக்கிறது. அதுபோல உற்சாகமூட்டுதலும் தெளிவானது. பீடத்தின் முன் மணவாட்டி கொண்டு வரப்பட வேண்டும். சபை ஜெப வீடாக மாற வேண்டும். முழங்காலில் நிற்கும் சபை மட்டுமே பீடத்தில் மணவாளனுக்காக ஆயத்தமாகிக் காத்திருக்கும் மணவாட்டியாயிருக்க முடியும்.

"ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்" வெளி.22:17.

> இந்தக் கடைசி மணி வேளையில் உங்களுக்கும் ஆண்டவருக்கும் இடையில் எதுவும் வராமல் கவனித்துக் கொள்ளுங்கள். தேவ கிருபையால் மட்டுமே நாம் நிலை நிற்க முடியும்.

ஒரு சாதாரண நாளில்

On some ordinary day

Charlene Gladney

பல ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு வேனிற் காலத்தின் காலை வேளையில் நான் கிராமப்புறம் ஒன்றில் வேலைக்குச் செல்ல வாகனத்தை ஓட்டிக் கொண்டிருந்தேன். வானம் நல்ல நீல நிறமாகவும் அதின் வெண்மேகங்கள் ஓடிக் கொண்டிருப்பதாகவும் சூரியன் பிரகாசமாக ஒளிர்வதையும் கண்டேன். "ஆண்டவர் மறுபடியும் வரும் நாள் எப்படி அழகாயிருக்கும்!" என்று எண்ணினேன். ஆச்சரியத்தோடு அதைக் குறித்து சிந்தித்தேன்.

திடீரென என்னை அறியாமலே வானொலிப் பெட்டியின் திருகினைத் தொட்டேன். அங்கு சுவிசேஷ நிலையத்தின் செய்தி ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. நான் இதுவரை கேட்காத ஒரு பாடலைக் கேட்டேன்:

"இன்று காலை நான் கண்விழித்து
இந்த நாளை சந்திக்க எழுந்தபோது
அது முந்தைய நாளைப் போலவே இருந்தது
பின்பு வசனத்தை வாசிக்க எண்ணினேன்
தேவ வசனத்தில் இவ்வாறு எழுதப்பட்டிருந்தது
இன்று போல ஒரு சாதாரண நாளில்
கர்த்தர் வருவார், நிச்சயமாய்

இன்று போல் ஒரு சாதாரண நாளில் கர்த்தர் வருவார்
தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை எடுத்துச் செல்ல
நாம் எக்காள சத்தம் கேட்கும்போது
நமது கால்கள் தரையைவிட்டு எழும்பும்
இன்று போல் ஒரு சாதாரண நாளில்
கர்த்தர் வருவார் நிச்சயமாய்

அப்போது உங்களை எச்சரிக்க சமயமிராது
உங்கள் பாதையை சரி பண்ணவும் சமயமிராது
திடீரென கர்த்தர் மறுபடியும் வருவார்
தேவ எக்காளம் அதிக சத்தமாய் முழங்கும்
அப்போது மரித்த பரிசுத்தவான்கள் எழும்பு வார்கள்

இன்றுபோல் ஒரு சாதாரண நாளில்
கர்த்தர் வருவார் நிச்சயம்"

எனது கேள்விக்கு நேரடியாக விரைவில் பதில் அசாதாரணமாகக் கிடைத்துவிட்டது. இதுவரை நான் கேட்டிராத அப்பாடல் என்னை அதிர்ச்சியடையச் செய்தது. அதன் வார்த்தைகளால் கவரப்பட்டேன். வேத வசனம் இதைக் குறித்து என்ன கூறுகிறது! தூய ஆவியானவர் லூக்.17:34-37 வசனங்களை எனக்குச் சுட்டிக் காண்பித்தார்.

"ஆம் இந்த உலக உருண்டையில் இயேசு வரும்போது மக்கள் தூக்கத்திலிருக்கலாம். இன்னும் சில இடங்களில் அது அதிகாலை வேளையாயிருக்கலாம். இன்னும் ஓரிடத்தில் பெண்கள் திரிகை திரித்து, மாவினால் அப்பம் செய்ய ஆயத்தப்படலாம். எல்லாம் அன்றாடம் நடைபெறும் சாதாரண நிகழ்வுகள் தான்.

நாள் முழுவதும் என் உள்ளம் இந்த சாதாரண நாளைக் குறித்ததாகவே யிருந்தது. தேவ ஆவியானவர் என்னிடம் பேசினார். சோதோம் கொமோரா அழிக்கப்பட்ட அன்று ஒரு சாதாரண நாளாகவே ஆரம்பித்தது. ஆண்கள் தங்கள் தொழிலுக்குச் சென்றனர். பிள்ளைகள் பள்ளிக்குச் சென்றனர். பெண்கள் வீட்டு வேலைகளை கவனித்தனர். அந்த நாள் அவர்களுக்கு முந்தின நாளைப் போல சாதாரணமாகவே காணப்பட்டது. ஆனால் அப்படி ஆரம்பித்த நாள் சாதாரணமாக முடியவில்லை. அது அசாதாரணமாக முடிந்தது.

"லோத்தினுடைய நாட்களில் நடந்தது போலவும் நடக்கும்; ஜனங்கள் புசித்தார்கள், குடித்தார்கள், கொண்டார்கள், விற்றார்கள், நட்டார்கள், கட்டினார்கள். லோத்து சோதோமை விட்டுப் புறப்பட்ட நாளிலே வானத்திலிருந்து அக்கினியும், கந்தகமும் வருஷித்து, எல்லாரையும் அழித்துப் போட்டது. மனுஷகுமாரன் வெளிப்படும் நாளிலும் அப்படியே நடக்கும்" லூக்.17:28-30.

லோத்துவின் நாட்களிலும் நோவாவின் நாட்களிலும் மக்கள் சாதாரண செயல்பாடுகளாகிய புசித்தல், குடித்தல், விற்குதல், நடுதல், கட்டுதல் போன்ற பணிகளில் மூழ்கியிருந்தார்கள். இவ்வாறான லௌகீக கவலைகளால் தேவனைப் பற்றியும், நித்தியத்தைப் பற்றியும் எண்ண இடமில்லாமற் போயிற்று. அத்தலைமுறையின் மக்கள் அதே நல்ல நாட்கள் நீடிக்கும் என்றும் பாவத்திற்குரிய தண்டனை வருவதில்லை என்றும் எண்ணி அதைக் குறித்து நிர்விசாரமாயிருந்தனர். அதே மனநிலை இன்றும் இருக்கவில்லையா! இந்த நிலை

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்க தொடர்ச்சி)

தான் இயேசு வரும்போது காணப்படும் என்று இயேசு முன்கூட்டியே கூறி விட்டார்.

இந்த சாதாரண நாளில் தேவன் தலையிட்டுவிட்டால் அவர் முன் எப்படி நிற்பீர்கள்? அவரது கட்டளைக்கு எப்படி பதிலளிப்பீர்கள்? ஒருவேளை அவர் வருவதற்குப் பதிலாக நீங்கள் இவ்வுலகை விட்டுப் போகவேண்டிய ஒரு நிலை ஏற்பட்டால் எப்படி அவரை சந்திப்பீர்கள்?

"அன்றியும் ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும் மனுஷனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது" எபி.9:27.

நீங்கள் ஆண்டவராகிய இயேசுவில் விசுவாசம் வைத்து கிறிஸ்துவை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டு அவரது இரத்தத்தால் உங்கள் பாவங்கள் கழுவப்பட்டுவிட்டால் உங்களுக்குப் பயமில்லை. ஆனால் நீங்கள் அவரை அறியாமலும், அல்லது அவரோடுள்ள தொடர்பில் குளிர்ந்தும் காணப்பட்டால் இப்போதே முழு இருதயத்தோடும் அவரைத் தேடுங்கள். சாதாரணமாகத் தோன்றும் ஒருநாள் அசாதாரணமாக முடிவடையலாம்.

"நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷ குமாரன் வருவார். ஆதலால் நீங்கள் ஆயத்தமாயிருங்கள்" மத்.24:44.

கிறிஸ்தவ வாழ்வில் எவ்வளவோ சொகுசுகளை அனுபவிக்கிற நாம் ஆண்டவராகிய இயேசுவின் இடை விடா தியாகத்தை மறந்து அவரது பணியைத் தொடராமலிருக்கிறோம்.

ஐந்து கிரீடங்கள்

The five crowns

ஐந்து விதியாசமான கிரீடங்கள் ஆண்டவர் வரும்போது நமக்குத் தரயிருக்கிறார். அவை ஒவ்வொன்றும் குறிப்பிட்ட சேவைக்காக அளிக்கப்படுபவை. 'அவனவன் தன் தன் வேலைக்கான கூலியைப் பெறுவான்' *1 கொரி. 3:8.*

சந்தோஷத்தின் கிரீடம்

இது ஆத்தும ஆதாயம் செய்கிறவர்களுக்கான பரிசு. "எங்களுக்கு நம்பிக்கையும், சந்தோஷமும், மகிழ்ச்சியின் கிரீடமுமாயிருப்பவர்கள் யார்? நம்முடைய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்து வரும்போது அவருடைய சன்னிதானத்தில் நீங்களல்லவா அப்படியிருப்பீர்கள்?" *1 தெச.2:19.*

பவுல் தெசலோனிக்கேயாவுக்குச் சென்று மூன்று ஓய்வுநாட்களில் அவர்களுக்குப் பிரசங்கித்தார். அந்நாட்களின் முடிவில் ஏற்பட்ட கலவரங்களால் அவர் துரத்தப்பட்டாலும் அனேகர் இரட்சிப்படைந்தனர். அவர்களுக்கு அவர் திரும்ப கடிதம் எழுதியபோது ஆண்டவரின் வருகையின் போது அவர்கள் தமக்கு மகிழ்ச்சியின் கிரீடமாயிருப்பார்கள் என்று குறிப்பிட்டார்.

நமது இரட்சிப்புக்குப் பின்பு கிறிஸ்துவுக்கு நேராக மற்றவர்களை நடத்துவது ஒரு சந்தோஷம். இந்த சந்தோஷம் இவ்வுலகில் மட்டுமல்ல நித்தியத்திலும் நீடிக்கும்.

நீதியின் கிரீடம்

"ஏனென்றால் நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப் போகிறேன்; நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது. நல்ல போராட்டத்தைப் போராடினேன். ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன். இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்" *2 தீமோ. 4:6-8.*

அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் வெகுமதியாக அளிக்கப்படுவது நீதியின் கிரீடம். தேவ வசனத்தில் அடங்கியிருக்கும் முழுமையான சத்தியத்தை விட்டு வலதுபுறம் இடதுபுறம் சற்றும் திரும்பாதவர் பவுல். சரியான பாதையைத் தெரிந்தெடுப்பதற்காக அவருக்கு நீதியின் கிரீடம் வாக்களிக்கப்படுகிறது. அவர் நினைப்பூட்டுவது என்னவெனில் எனக்கு மட்டுமல்ல, அவரது பிரசன்னத்தை விரும்பும் யாவருக்கும் இது அளிக்கப்படும் என்பதே.

மகிமையின் கிரீடம்

"அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பன் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள்" *1 பேதுரு 5:4.*

மகிமையின் கிரீடம் போதகர்களுக்கும் மூப்பர்களுக்கும் மந்தையை மேய்க்கிறவர்களுக்கும் கொடுக்கப்படுகிறது. அது உத்தமமாய் மந்தையை மேய்த்தால் மட்டுமே அளிக்கப்படும். இவ்வுலகிலும் சில பரிசுகள் கிடைக்கப் பெறலாம். ஆனால் பிரதான மேய்ப்பன் வெளிப்படும்போதுதான் மிகப்பெரிய வெகுமதி அளிக்கப்படும். மேய்ப்பனின் பணி தாழ்மையானது. தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்.

அழிவில்லாத கிரீடம்

"பந்தய சாலையில் ஓடுகிறவர்களெல்லாரும் ஓடுவார்கள். ஆகிலும் ஒருவனே பந்தயத்தை பெறுவானென்று அறியீர்களா? நீங்கள் பெற்றுக்கொள்ளத் தக்கதாக ஓடுங்கள். பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள். நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம்" *1 கொரி.9:24-25.*

அப்போஸ்தலன் தன்னை பந்தய சாலையில் ஓடுகிறவர்களுக்கு ஒப்பிடுகிறார். அவர் புசித்து, குடித்து சொகுசாக வாழ்ந்திருக்கலாம். அவர் ஒரு பரிசைப் பெற விரும்பினார். அதை அவர் மனிதரிடமிருந்து பெற விரும்பவில்லை. ஓட்டத்தின் முடிவில் அழிவில்லாத கிரீடத்தைப் பெற அவர் வாஞ்சித்தார்.

ஜீவ கிரீடம்

இவ்வகையான கிரீடம் இரு முறை வெவ்வேறு வகையான சூழ்நிலைகளில் சொல்லப்பட்டிருக்கிறது. சிமிர்னா சபையில் மிகுந்த உபத்திரவம் உண்டான போது யோவான் இவ்வாறு எழுத சொல்லப்பட்டது: ".....ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு; அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன்" வெளி.*2:10.* இன்னொரு நிபந்தனையிலும் ஜீவகிரீடம் அளிக்கப்படுகிறது. "சோதனையை சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தம னென்று விளங்கின பின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவ கிரீடத்தைப் பெறுவான்" யாக்.*1:12.* சோதனைதான் உலகிற்குப் பாவத்தைக் கொண்டுவந்தது. சோதனையை எதிர்த்து வெற்றி பெறுபவர்கள் ஜீவ கிரீடத்தைப் பெறுவார்கள்.

மேற்கூறிய கிரீடங்களைப் பெற்றுக்கொண்டு என்ன செய்வது? "இருபத்து நான்கு மூப்பர்களும் சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிற வரைத் தொழுதுகொண்டு, தங்கள் கிரீடங்களை சிங்காசனத்திற்கு முன்பாக வைத்து; கர்த்தாவே, தேவரீர் மகிமையையும் கனத்தையும், வல்லமையையும் பெற்றுக் கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர்; நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர். உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும், சிருஷ்டிக்கப்பட்டவைகளுமாயிருக்கிறது என்றார்கள்" வெளி.*4:10-11.* இது நமக்கு மகிழ்ச்சி தரும் வாய்ப்பு. நமது கிரீடங்களை அவரது பாதத்தில் படைத்து அவரை கர்த்தாதி கர்த்தராக முடி சூட்டுவோம்.

வரப்போகிற துன்பங்களுக்கு தப்பிக்கொள்ள ஒரே மார்க்கம் விழித்திருந்து ஜெபிப்பதாகும்.

கிறிஸ்துவின் வருகைக்கு முந்திய மாலையில்

On the eve of Christ's return

Sarah Foulkes Moore

நாம் நினையாத வேளையில் இயேசு வரப்போகிறார். அதற்கு எச்சரிக்கை கிடையாது. மின்னல் எச்சரித்துவிட்டு வருவதில்லை. "மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்கு வரைக்கும் பிரகாசிக்கிறது போல மனுஷ குமாரனுடைய வருகையுமிருக்கும்" மத். *24:27.* ஒரு விரைவானதும் வேகமானதுமான கண்களைக் குருடாக்கும் ஒளி தோன்றும். அவ்வளவுதான் விழித்திருப்பவர்கள் கர்த்தரிடம் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். விழிப்பற்றவர்கள் கர்த்தருடைய எச்சரிப்பின்படி பூமியில் கடைசி நியாயத்தீர்ப்புக்காக வைக்கப்படுவார்கள் மத். *24:45-51.*

ஜார்ஜ் முல்லரின் விசுவாச வாழ்வு [பகுதி-1]

George Muller's Life of Trust - Part 1

ஜார்ஜ் முல்லரின் விசுவாசமும் ஜெபமும் நிறைந்த எடுத்துக்காட்டான வாழ்வுக்கு ஏற்றபடி அவர் கிறிஸ்தவராக வளர்க்கப்படவில்லை. 1805-ம் ஆண்டு பிரஷ்ஷியாவில் பிறந்த அவரது இளமை வாலிபம் ஆகிய நாட்களில் எந்த கிறிஸ்தவ தாக்கமும் பயிற்சியும் அவருக்குக் கிடைக்கவில்லை. அவர் வாசிக்க வேத புஸ்தகம் இருக்கவில்லை. அவருக்கும் அவரது சகோதரருக்கும் தந்தை அவர்களது பருவத்திற்கேற்றபடி பணத்தை அளித்தார். எனவே பாவப் பழக்கங்களில் ஈடுபட அது ஏதுவாயிருந்தது. எப்படியும் வாலிபனான முல்லர் கருத்தாகப் படித்து 6 மொழிகளில் தேர்ச்சி பெற்றார். அவற்றில் எபிரேயம், லத்தீன், கிரேக்கு ஆகியவை அடங்கும்.

அவரது தந்தை அவரை ஒரு போதகராக்க விரும்பினார். ஏனெனில் அது நல்ல வருமானமுள்ள பணியாயிருந்தது. மேலும் தான் வேலையிலிருந்து ஓய்வு பெற்றதும் மகனுடன் சொகுசாக வாழ எண்ணினார். எனவே அவரை வேதகலாசாலைக்கு அனுப்பினார். வேதகலாசாலை மாணவனாயிருந்தும் முல்லருக்கு இரட்சிப்பு என்றால் என்ன வென்று தெரியாதிருந்தது. பாவ வாழ்க்கையில் தொடர்ந்த அவர் தான் திருந்த வேண்டும் என்ற விருப்பம் கொண்டார். ஆனால் அவரது முயற்சிகள் வீணாயின.

திருப்பு முனை

இருபது வயதாயிருக்கும்போது அவர் ஒரு உத்தம கிறிஸ்தவரின் இல்லத்தில் ஒரு சனிக்கிழமை இரவு ஜெபக்கூடுகைக்காக அழைக்கப்பட்டார். அக்கூடுகையில் வேதவாசிப்பு, ஜெபம் மற்றும் அச்சிடப்பட்ட ஒரு பிரசங்கம் ஆகியவை இடம் பெற்றன. இருதயத்தில் சந்தோஷம் நிறைந்தவராய் வீடு திரும்பினார். தேவன் கிருபையாய் அவரது இருதயத்தில் கிரியை செய்ய ஆரம்பித்தார். அது அவருடைய வாழ்வின் ஒரு திருப்பு முனையாயிற்று. உடனே அனைத்து பாவப்பழக்கங்களும் நிற்கவில்லை. அவரது வாழ்வு வித்தியாசமானதாயிருந்தது. அவர் வேத புஸ்தகத்தை அதிகமாக வாசிக்கவும் ஜெபிக்கவும் ஆரம்பித்தார். பாவம் நிறைந்த தோழர்கள் அகற்றப்பட்டனர். கிறிஸ்தவ ஐக்கியத்தை விரும்பி அதைப் பல்வேறு இடங்களில் நாடினார். பயபக்தியுள்ள ஒருவரின் பிரசங்கத்தைக் கேட்க அவர் 15 மைல் தூரம் நடந்த நாட்களும் உண்டு. அவரது உடன் மாணவர்கள் அவரைப் பரிகசித்தனர். தனது அனுபவத்தைத் தந்தைக்குத் தெரிவித்தபோது அவர் கோபமடைந்தார்.

அந்தக் கலாசாலையில் புதிதாக Dr. தோலக் என்பவர் விரிவுரையாளராக வந்தார். அவர் மூலம் முல்லர் புதிய ஒளியையும் உதவியையும் பெற்றார். விசுவாசமுள்ள சில உடன் மாணவர்களோடு ஞாயிறு மாலை வேளைகளில் ஆராதனை நடத்தப்பட்டது. தேவனுக்காகவே முற்றிலுமாக வாழ வேண்டும் என்ற ஆசை அவரில் வளர்ந்தது. எனவே கர்த்தருடைய பணிக்காக தன்னை ஆயத்தம் பண்ண வாழ்வில் தேவனுடைய சித்தத்திற்காக ஜெபிக்க ஆரம்பித்தார்.

Dr. தோலக்கின் உற்சாகமூட்டு தலின்படி யூதர்களுக்கு மிஷனெறியாகச் செல்ல விண்ணப்பித்தார். அதற்கு ஆயத்தமாக 6 மாதங்கள் லண்டனில் பயிற்சி பெற வேண்டியதாயிருந்தது. அவரது தந்தை அதற்கு சம்மதம் தெரிவித்தார். ஆனால் பிரஷ்ஷியாவில் வாலிபர்கள் சில காலம் படையில் பணியாற்ற வேண்டியது கட்டாயமாயிருந்தது. ஒரு மருத்துவரால் பரிசோதிக்கப்பட்ட அவருக்கு மிஷனெறி பயிற்சிக்கு செல்ல விதிவிலக்கு அளிக்கப்பட்டது.

லண்டன் வந்து கடினமாகவும் உற்சாகமாகவும் படித்த அவரது உடல் நிலை மோசமாகி வாழ முடியுமா? என்ற நிலையை எட்டிவிட்டார். சிலகாலம் ஓய்வெடுத்த அவர் ஆண்டவருடைய சித்தத்திற்காக தொடர்ந்து ஜெபிக்க குணமடைய ஆரம்பித்தார். ஒரு தேவ பயமுள்ள சகோதரனுடைய போதனையால் தூய ஆவியானவரை வழிகாட்டுதலுக்காக சார்ந்து கொள்வது மிக அவசியம் என்றும், பிரசங்கங்கள் ஆயத்தம் பண்ண அது மிக முக்கியம் என்றும் புரிந்து கொண்டார். பிற விளக்க வுரைகளையும் புத்தகங்களையும் மாற்றி விட்டு வேத புத்தகத்தை மட்டும் வாசிக்கவும் படிக்கவும் சமயத்தை செலவிட்டார்.

"இதன் விளைவாக முதல் நாள் மாலையில் நான் என் அறைக்குள்ளிருந்து ஜெபிக்கவும் வேதவசனத்தை தியானிக்கவும் ஆரம்பித்தபோது சில மணி நேரங்களிலேயே முன்பு பல மாதங்கள் நான் கற்றதைவிட அதிகமாகக் கற்றுக்கொண்டேன். மிக முக்கியமான வேறுபாடு என்ன வென்றால் நான் உண்மையான பெலனை என் ஆத்துமாவில் இவ்வாறு பெற்றேன்" என்று அவர் எழுதியிருக்கிறார்.

புதிய வலுவுடன் மறுபடியும் கல்வியைத் தொடர லண்டன் வந்தார். காலையில் 6 மணி முதல் 8 மணி வரை ஜெபிக்கவும் வேத வசனங்களை தியானிக்கவும் சக மாணவர்களுக்கு ஆலோசனை கொடுத்தார். ஆண்டவர் அவர்களுக்குச் சொன்ன காரியங்களைப் பகிர்ந்து கொள்ளவும் உற்சாகப் படுத்தினார். மாலை கூடுகைகளுக்குப்பின் தேவனோடு தமது இனிய உறவைப் பெற்ற அவர் நடு இரவு மட்டும் ஜெபித்துவிட்டு ஒரு நண்பனின் அறையில் இன்னும் ஓரிரு மணி நேரம் ஜெபத்தில் செலவிடுவது வழக்கம். சந்தோஷத்தால் நிரம்பிய அவர் தூக்கத்தை நாடாமல் காலை 6 மணிக்கு எழுந்து மாணவர்களுடன் ஜெபித்தார்.

மறுபடியும் இந்த உத்தம மாணவரின் உடல் நலன் குறையத் தொடங்கியது. படிப்பதை விட்டுவிட்டு ஆண்டவருக்காக பணி செய்ய விரும்பினார். லண்டனில் யூதர்கள் மத்தியில் ஊழியம் செய்ய வாசல் திறந்தது. ஆனால் மிஷனெறி சங்கம் அதிலிருந்து தடுத்து அவர்களோடு இணைந்து செயல்படவும் தேவன் நடத்துவதன்படி சேவை செய்யவும் கூறியது.

தேவனுக்காக காத்திருக்க கற்றுக்கொள்ளுதல்

சில காலங்களுக்குள் முல்லர் டெயின்மவுத் என்ற சிற்றாலயத்தில் போதகராக அமர்த்தப்பட்டார். இந்த சிறு வயதில் மக்களுக்கு எந்த பகுதியிலிருந்து செய்தி கொடுப்பது என்று அவருக்குத் தெரியாதிருந்தது. எனவே ஜெபத்தின் மூலம் இதனை ஆண்டவரிடம் கேட்க ஆரம்பித்தார். எதுவும் மனதில் படாதபோது தான் அனுதினம் வாசித்த பகுதியை வாசித்து அதில் ஒரு பகுதி அவருக்குத் தூண்டுதலாக இருந்தால் அதைத் தெரிந்து கொள்வார். சில வேளைகளில் ஒரு பகுதியையும் ஆயத்தம் பண்ணாமலேயே செல்ல நேரிட்டதுண்டு. அப்போதெல்லாம் கர்த்தர் அவருடனிருந்து அவர் பிரசங்கிக்குமுன் வழிநடத்தி ஒரு பகுதியைக் காண்பிக்க உத்தமராயிருந்தார்.

விசுவாசத்தில் துணிந்து முன்னேறுதல்

முல்லர் Miss. மேரி குரோவ்ஸ் என்பவரைத் திருமணம் செய்தார். சில வாரங்களில் சிற்றாலயத்தில் தனது சம்பளத்தை விட்டுவிட இருவரும் தீர்மானித்தனர். இவரது சம்பளம் அங்கு வருபவர்களின் இருக்கை வாடகையாக சேகரிக்கப்பட்டது. இது வேதவசனத்துக்குப் புறம்பானது என்றும் இருக்கைகள் இலவசமாக அளிக்கப்பட வேண்டும் என்றும் அவர் விரும்பினார். ஒரு பெட்டி வைக்கப்பட்டு தானாக காணிக்கை கொடுக்க வேண்டும் என்பது அவரது எதிர்பார்ப்பு. சில வேளைகளில் காணிக்கை மிக குறைவாகவும் அதை கவனமாக சேகரித்து அவருக்குக் கொடுப்பதில் நிர்விசாரமும் இருந்தது. பல வேளைகளில் அத்தம்பதியரின் பணப்பை வெறுமையானது. ஆனால் அவர்களது உத்தம ஜெபத்தால் தேவன் யாரிடமேனும் பேசி உணவோ பணமோ கிடைக்க செய்தார். இவ்வாறு தேவைகள் சந்திக்கப்பட்டு அவர்களது விசுவாசம் பெருகியது. கடன்படாமலிருப்பதில் இருவரும் மிகவும் கவனமாயிருந்தனர். ஜீவனுள்ள தேவன் மேல் நம்பிக்கையாயிருப்பதற்குத் தன்னை சாட்சியாக நிறுத்த அவர் விரும்பினார்.

"இவ்விதமாக வாழ்வது நான் குளிர்ந்து போகும்போது என் இருதயத்தில் கிருபையின் கிரியையை எழுப்புவதற்கு ஏதுவாயிருந்தது. நான் பின் மாறிப்போகும்போது மறுபடியும் ஆண்டவரிடம் என்னைக் கொண்டு வரவும் கூடியதாயிருந்தது. பாவத்தில் வாழ்ந்து கொண்டு தேவனோடு உறவு கொள்வதும் அதன் மூலம் பரத்திலிருந்து வாழ்வின் தேவைகளைப் பெற்றுக் கொள்வதும் கூடாதது என அறிந்தேன். அடிக்கடி ஒரு ஜெபத்திற்குக் கிடைத்த

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்க தொடர்ச்சி)

உடனடி பதில் என் ஆத்துமாவை உயிர்ப்பித்து புதிய சந்தோஷத்தால் நிரப்பியது" என அவர் கூறியிருக்கிறார்.

சில வேளைகளில் மத்தியான உணவுக்காக நன்றி சொல்லிக்கொண்டே மாலை உணவுக்காக ஜெபித்திருக்கிறார். ஆனால் ஓராண்டு காலம் சம்பளமே இல்லாமல் வாழ்ந்தபோது சேகரித்துப் பெற்றுக்கொண்டதை விட அதிகமாக ஆசீர்வதிக்கப்பட்டதை உணர்ந்தார். "நான் ஒரு கடின ஜமானனுக்கு உழைக்க வில்லை, அதிலே நான் மகிழ்ச்சியடைகி றேன்" என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டு ஆண்டுகளுக்கு அதிக மாக டெயின்மவுத் சபையில் பணியாற் றிய பின் அவர் பிரிஸ்டல் செல்ல வேண் டியதாயிற்று. தேவன் அவரது பணியை ஆசீர்வதித்து, அனேக ஆத்துமாக்களைக் கொடுத்தார். அவர்களைத் தேடி வந்த ஏழை எளியோருக்கு உணவளித்து உதவி செய்தனர்.

வேத அறிவு ஸ்தாபனம்

பல ஆண்டுகள் நல்ல ஊழியம் பிரிஸ்டலில் செய்தபின்பு சகோதரன் கிராயிக் என்ற உடன் ஊழியருடன் இணைந்து ஒரு மிஷனெறி ஸ்தா பனத்தை உருவாக்க உந்தப்பட்டனர். இதன் மூலம் உள்நாட்டிலும், வெளி நாட்டிலும் சுவிசேஷம் அறிவிப்பது அவர்களது அவா. அதற்கு "வேத அறிவு ஸ்தாபனம்" என பெயரிடப்பட்டது. இதன் மூலம் பகல் பள்ளிகளும், வேத பாடசாலைகளும் ஆரம்பிக்கப்பட்டன. இங்கு ஆவிக்குரிய போதனைகள் அளிக்கப்பட்டன. வேத புஸ்தகங்களும் சுவிசேஷ பிரதிகளும் வினியோகிக்கப் பட்டு மிஷனெறி முயற்சிகளுக்கு உதவி செய்யப்பட்டது.

ஸ்தாபனங்களை நடத்தும் அதே அடிப்படையில் தங்கள் வாழ்க்கைகளை அமைத்துக் கொள்ள வழிவகுக்கப் பட்டது. பொருளாதாரத்திற்காக ஆண்ட வரை முற்றிலும் நம்பவும், கடன் படாம லிருக்கவும் நிச்சயித்ததோடு, "ஸ்தாபனத் தின் வெற்றி கொடுக்கும் பணத்தின் அளவிலோ, வினியோகிக்கப்பட்ட வேத புத்தகத்தின் அடிப்படையிலோ கணிக் கப்படக்கூடாது என்றும் சகரியா 4:6-ன் படி கர்த்தர் பணியை ஆசீர்வதிக்கும் அடிப்படையில் அறிவிக்கப்பட வேண் டும்" என்றும் கொள்ளப்பட்டது. எனவே ஜெபத்தில் காத்திருந்து அவர் செய்யும் உதவியின் அளவே கணிக்கப்பட்டது.

பல மாதங்களுக்குப் பின்பு ஒரு சிறு அனாதை சிறுவன் பகல் பள்ளிக்கு வந்து அங்குள்ள போதனைகள் மூலம் தனது ஆத்துமாவைக் குறித்துக் கரிசனை யுடையவனாயிருப்பதை அறிந்தார். இவன் பள்ளியிலிருந்து மாற்றப்பட்டு சிறிது தொலைவிலுள்ள ஒரு ஏழைகள் வீட்டில் அனுப்பப்படுவதாக இருந்ததால் துக்கமடைந்தான். இதனால் மனம் வருந்திய முல்லர் உதவியற்ற குழந்தை களுக்கு ஏதேனும் உதவி செய்ய விரும்பினார்.

முதல் அனாதைகள் இல்லம்

1835-ல் தனது 30-வது வயதில் முல்லர் ஆதரவற்றோருக்கு ஒரு இல்லம் நிறுவ உணர்த்தப்பட்டார். அவர் கிறிஸ்தவர்களுக்கு தம்மை ஜீவனுள்ள தேவனுக்கு சாட்சியாகக் காண்பிக்க விரும்பினார். பதினான்கு முதல் பதினாறு மணி நேரம் வரை பெற்றோர் பிள்ளை களுக்காக கடினமாக உழைப்பதை அவர் கண்டார். அதிகப்படியான பணியால் உடல்நிலை பாதிப்புடன் ஜெபிக்கவும், வேதம் வாசிக்கவும் அவர்களுக்கு நேரமில்லாமல் ஆத்மீக வாழ்வு பாதிக்கப் பட்டது. இத்தகைய பெற்றோர் அவர்களது பணியால் ஆண்டவரே அவர்களை பராமரிக்கிறார் என்பதை அறிந்து கொள்ள வேண்டும் என்று முல்லர் விரும்பினார்.

வயது முதிர்ந்தவர்கள் வேலை செய்ய முடியாத போது என்ன செய்வது! அவர்கள் ஏழைகள் இல்லத்திற்குத்தான் செல்ல வேண்டும். அவர்களும் கூட தங்கள் நம்பிக்கையை கர்த்தர் மேல் வைக்க வேண்டும், அவர் அவர்களை கைவிடமாட்டார் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும், வியாபாரம் செய் கிறவர்கள் கூட கர்த்தரை நம்பினால் வியாபாரத்தை நேர்மையாக நடத்தி நல்ல முன்னேற்றத்தை பெற முடியும் என அறிந்து கொள்ள விரும்பினார். தேவனுக்கு பயப்படாதவர்களாயினும், வேலை போய்விடுமோ என்ற பயத்தி லிருந்தவர்கள் உத்தமத்தில் மாறாத தேவனையும் அவரது விருப்பம், கூடுமை உதவி யாவும் அனைவருக்கும் உண்டு என்பதை அறியச் செய்ய விரும்பினார்.

அவர் தேவனுடைய வார்த்தை களை நம்பினதுமின்றி அவரது உத்த மத்தை மற்றவர்களும் கண்டு அனுப விக்க அவர் விரும்பினார். உடமைகளற்ற ஒருவர் ஒரு அனாதைகள் இல்லத்தை ஜெபத்தின் மூலம் நடத்தக் கூடுமானால் மக்கள் இதனைக் கண்டு அவர்களும் ஆண்டவரை நம்ப தூண்டப்படுவார் கள், உண்மையான ஜீவனுள்ள தேவனு டைய செயலால் மனந்திரும்பாதவர் களும் மனந்திரும்ப ஏதுவாகும். இவை யெல்லாம் அவரது மனதின் சிந்தனை களாயிருந்தன. எனவே அனாதைகளுக்கு உதவி செய்யவும், அவர்களுடைய பொருளாதாரம் மட்டுமல்ல அவர்களது ஆத்தும வாழ்வில் வளரவும் ஆதரவற் றோர் இல்லம் ஆரம்பிக்க முயற்சி செய்தார்.

(2-ம் பக்க தொடர்ச்சி)

பந்தியிலிருக்கும் போது, அந்தத் தைலத் தை அவர் சிரசின்மேல் ஊற்றினாள்.

அவருடைய சீஷர்கள் அதைக் கண்டு **விசனமடைந்து** : இந்த வீண் செலவு என்னத்திற்கு?

இந்தத் தைலத்தை உயர்ந்த விலைக்கு விற்று, தரித்திரருக்குக் கொடுக்க லாமே என்றார்கள் மத்தேயு.26:6-9.

7. விசனத்தோடு கொடுக்கிறீர்களா?

அவனவன் விசனமாயுமல்ல, கட்டாய மாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமா யிருக்கிறார் 2 கொரிந்தியர் 9:7.

அருமையான கர்த்தருடைய பிள்ளைகளே, டிசம்பர் மாதம் 31-ம் தேதி வரையில் செய்ய வேண்டிய வேலை களைச் செய்தோம். ஜனவரி 1-ம் தேதி முதல் 15-ம் தியதிவரை நானும், எனது மகளும் அலுவலக பணிகளை செய்ய முடியாதபடிக்கு சுகவீனமாய் இருந்த படியினாலும், சுமார் 6 நாட்கள் இரண்டு பேரும் ஒரே ஆஸ்பத்திரியில் ஒரே அறையில் தங்கி சிகிட்சை பெற்றபடி யினாலும், எங்கள் இரண்டு பேருக்கும் உதவியாக மகன் செயல்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டபடியினாலும் முக்கியமான அலுவலக பணிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது, தயவாய் பொறுத்துக்கொள்ளுங்கள்.

கர்த்தர் இரங்குகிறபடி பழைய படி அலுவலக பணிகளை துரிதமாய் செய்து up to date ஆக்குவோம் என்று கர்த்தருக்குள் நம்புகிறோம்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உங்கள் சகோதரன்,

உதவி : 9489740295 **வெஸ்லி தேவதாசன்**
அலுவலகம் : 9543221008 (WESLEY DEVADASON)

Registered with the Registrar of News Paper For India under R.N.I. TN TAM 11967/'67
Date of Publication : 27th of Every month

If un-delivered please return to:
VARUKAYIN THOOTHAN
Nagercoil - 629 001. INDIA.
Mobile: 9543221008

Book Packets contains periodicals

To

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason